**பொலன்னறுவை பிரதேச சபை - 2022**

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலன்னறுவை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பொலன்னறுவை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம்நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல்மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல். இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள்தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள்மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்
### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய மத்திரை கட்டண வருமானம் ரூபா 327,540 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்த வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நவம்பர் வரை நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 952,834 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன், திசெம்பர் மாதத்திற்குரிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்குரியதாக மணல் வருமானம் ரூபா 435,650 தொகை நிதிக்கூற்றுக்களில் விடுபட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் வீதவரி வருமானம் ரூபா 54,021 தொகை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகத்கு தீர்க்கப்பட்டிருந்த தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திற்காக செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 483,757 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்பித்திருந்த பாதைகள் மற்றும் பாலங்கள் மதகுகளின் அட்டவணை பிரகாரம் கடவல மா ஒய மதகை தயாரிப்பதன் பெறுமதி ரூபா 237,094 தொகைகூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் இனங்காண வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகத்கு செலுத்த வேண்டிய ரூபா 145,201 ஆன 10 நானாவித கடன்கொடுனர் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களிற்கு அட்டுறு அடிப்படையில் ஆண்டிற்குரிய செலவினத்தை இனங்காண வேண்டும். |
| (ஏ) | பிரதேச அபிவிருத்தி உதவி கருத்திட்டத்திலிருந்து கிடைத்த ஏற்பாடின் மீது நிர்மாணித்திருந்த ரூபா 5,237,499 பெறுமதியான வெவேதன்ன பிரவேச பாதையை நிலையான சொத்துக்களில் காட்டியிருக்கவில்லை. | - மேற்படி - | ஆண்டிற்குரிய நிலையான சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஐ) | வேலைகள் பூர்த்தி செய்யப்படாத 08 இலத்திரனியல் நூலகங்களின் பெறுமதி ரூபா 14,163,825 ஆக காட்டப்பட்டிருந்த போதும், பூர்த்தி சதவீதம் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டிய பெறுமதி ரூபா 13,723,979 ஆனதில் ரூபா 439,846 ஆன நடைமுறை வேலைகள் கூடுதலாக காட்டப்பட்டிருந்து. | - மேற்படி - | நிர்மாணங்களை பௌதீக ரீதியான பூர்த்தி செய்த சதவீதம் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை லேலைகளாக காட்ட வேண்டும். |
| (ஒ) | உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 பின்னிணைப்பு படிவத்தில் EG 2.7 இற்கு முரணாக மீளாய்வாண்டில் மூலதன செலவு மானியம் ரூபா 14,348,884 கூடுதலாக காட்டப்பட்டிருந்து. | - மேற்படி - | ஆண்டிற்குரிய மூலதன செலவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளில கிடைத்த மூலதன மானியங்களினால் நிர்மாணித்த சொத்துக்கள்/ கொள்வனவு செய்த சொத்துக்களின் பெறுமானத் தேய்வு விகிதங்கள் பிரகாரம் ஆண்டின் வருமானத்தை இனங்கண்டிருக்கவில்லை. | - மேற்படி - | மூலதன மானியங்களினால் நிர்மாணித்த/ கொள்வனவு செய்த சொத்துக்களை பெறுமானத் தேய்வு கணக்கு வைக்கும் அடிப்படையில் வருமானத்தை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | பிபிதெமு பொலொன்னறுவ கருத்திட்ட அலுவலகத்தினால் 2021 மார்ச் 16 திகிதி கிடைத்த ரூபா 961,830 பெறுமதியான உபகரகணங்களை நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டியிருக்கவில்லை. | - மேற்படி - | அன்பளிப்பாக கிடைக்கும் பண்டங்களை சரியாக இனங்கண்டு இருப்புப் புத்தகங்களில் குறிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டு இறுதியில நடைமுறையல்ல சொத்துக்களில் காட்ட வேண்டிய ரூபா 6,109,793 பெறுமதியான 13 கட்டிடங்களின் பெறுமதியும், 41 பாதைகள் பாலங்கள் பதகுகளின் ரூபா 25,420,174 ஆன பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை. | - மேற்படி - | நிலையான சொத்துக்களை சரியாக பதிவேடுகளில் குறிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகத்கு வருமான பதிவேடுகளில் காட்டியுள்ள வருமானங்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள வருமனங்களிற்கு இடையில் ரூபா 918,925 ஆன இணக்கமின்மை ஆனது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சரியான பெறுமதிகளை இனங்கண்டு நேரொத்த அறிக்கைகளை அல்லது ஆவணங்களை சரிசெய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகத்கு பேரேட்டு கணக்கு மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள மீதிகளிற்கிடையில் ரூபா 10,057,721 ஆன இணக்கமின்மை ஆனது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருந்த தளபாட உபகரங்கள் பிரகாரம் 02 தளபாட உறுப்படிகளின் பெறுமதி ரூபா 153,875 ஆக | -மேற்படி- | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமானங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்த போதும், அதன் சரியான பெறுமதி ரூபா 289,000 ஆனதில் தளபாட உறுப்படிகளின் பெறுமதி ரூபா 135,125 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள மீளாய்வாண்டு இறுதியில் மருத்துப் பொருட்களின் பெறுமிதி ரூபா 452,498 ஆக காட்டியிருந்த போதும், நிலையப் பொறுப்பு ஆயர்வேத மருத்துவ அலுவலர்களின் 2022 திசெம்ப்ர் 31 மீதி உறுதிப்பாடுகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 896,033 ஆனதில் ரூபா 443,535 இனால் இருப்பு குறைத்து காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | நிதிக்கூற்றுக்களில் சரியான இருப்பு பெறுமதிகளை காட்ட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 1,343,457 ஆன 04 கணக்கு மீதிகளில் மீதி உறுதிப்பாடுகள், ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்காததால் அவற்றை திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாக. | மீதிகளை உறுதி செய்து கொண்டு தேவையான தகவல்களை பேணிச் செல்ல வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 3,504,601 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவை மிகைத்த் வருமானம் ரூபா 13,086,784 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,321,500 | 1,545,544 | 873,133 | 1,767,196 | 2,330,011 | 1,288,858 | 1,284,294 | 1,772,285 |
| (ii) | வாடகை | 3,433,710 | 4,596,668 | 3,771,718 | 1,119,500 | 3,503,710 | 5,228,210 | 5,392,276 | 245,650 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 377,000 | 385,800 | 353,800 | 504,380 | 448,500 | 651,890 | 651,890 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 72,314,860 | 29,686,466 | 16,649,151 | 45,341,565 | 29,750,265 | 66,899,975 | 25,132,221 | 75,827,441 |
| | | 77,447,070 | 36,214,478 | 21,647,802 | 48,732,641 | 36,032,486 | 74,068,933 | 32,460,681 | 77,845,376 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **அனுமதிபபத்திர கட்டணம்**<br>மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய வியாபார அனுமதிப்பத்திரம், கைத்தொழில் வரி மற்றும் வியாபார வரி நிலுவை ரூபா 504,380 ஆனது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை அனுமதிப்பத்திர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | **ஏனைய வருமானம்** | | |
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலுவை நீர் கட்டண வருமானம் ரூபா 174,320 ஆனதுடன், அது 06 ஆண்டுகளிற்கு அதிக காலமாக தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதான செயலாளரிடம் பதிவழிப்பதற்காக அங்கீகாரத்தை கோரியுள்ளதாக. | சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானதை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலுவை குப்பை கட்டண வருமானம் ரூபா 647,500 ஆனதுடன், இந்த பெறுமதியில் இருந்து ரூபா 574,500 தொகை 2018 ஆண்டிலிருந்து நிலவும் நிலுவையாகும். | -மேற்படி- | சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானதை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3 செயற்ட்டு மீளாய்வு

**மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **அனுமதிபபத்திர கட்டணம்**<br>பிரதேசசபையில் 2022 திசெம்பர் 31 திகதியன்று ஆளணியனர் தகவல்களின் பிரகாரம் மூன்றாம் நிலையில் ஒரு வெற்றிடமும், இரண்டாம் நிலையில் 07 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன், ஆரம்ப நிலை ஆளணியில் ஒரு பதவியில் மிகையும் ஆனது. | காணப்படும் வெற்றிடங்களை நிரப்புமாறு உள்ளூராட்சி நிறுவனங்களை கோரியதாக. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |